Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 10 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 19 (26 10-64) திங்கட்கிழமை இதழ் 257

மலிவு விற்பனை

நல்ல சந்தர்ப்பம்
புத்தம் புதிய டிசையின்:
★ பட்டு சேலைகள்
★ கோடம்பாக்கம் சேலைகள்
★ உறையூர் சேலைகள்
இன்னும் தெரிவு செய்ய
ஏராளமான தினுசுகள் உண்டு.

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7169

இலங்கை — இந்திய

# பிரதிநிதிகள் நடத்திய சாதாரண பேச்சுக்கள்

## பிரதமர்கள் மீண்டும் சந்திக்குமுன்னர் நிலைமை பற்றி ஆராய்ந்தனர்

புதுடில்லி, அக். 25

**இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் செய்துகொண்ட ஒரு ஏற்பாட்டைத் தொடர்ந்து இலங்கை, இந்தியப் பிரதிநிதிகள் இன்று காலை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்கள். இன்று காலை நடைபெற்ற பேச்சுகள் சாதாரணமான முறையில் அமைந்திருந்தது.**

இலங்கை, இந்தியப் பிரதிநிதிகளுக்கிடையே இன்று காலை சுமார் இருமணிநேரமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஓரளவு சமுகமான சூழ்நிலையில் தான் இடம் பெற்றது என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டனர். இன்றைய பேச்சு வார்த்தைகளில் இலங்கை சார்பாக திரு. இலங்கரத்தின, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இந்தியா சார்பில் திரு சுவர்ண்சிங்கும் சென்னைமந்திரி திரு ராமையாவும் கலந்துகொண்டனர். இருதேச ஹைகமிஷனர்களும் அப்போது உடனிருந்தனர்.

## கிளிநொச்சியில் புதிய கட்சி அங்குரார்ப்பணம்

### பத்திரிகை மசோதாவுக்கு கண்டனம்; நெசவாலை நிறுவத் தீர்மானம்

கச்சாய், ஞாயிறு

"உடன்டியாக பத்திரிகை மசோதாவை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும்" என்ற தீர்மானம் நேற்று மாலை கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட புதிய அரசியல் கட்சியின் முதலாவது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிளிநொச்சி எம். பி.யின் இல்லத்தில் நடைபெற்ற ஐக்கிய தமிழர் சுதந்திரக்கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம் தலைமை தாங்கினர். கிளிநொச்சித் தொகுதியில் மட்டுமன்றி வட மாகாணத்திலிருந்து வந்த பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

கிளிநொச்சியில், இக்கட்சியின் மேற்பார்வையில் ஒரு பெரிய நெசவு ஆலைநிறுவி, வேலையற்றிருக்கும் படித்த வாலிபர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்றும், இந்த ஆலையை நிறுவுவதற்கு, செல்வம் படைத்த தமிழர்களிடம் பணவுதவி பெற வேண்டுமென்றும், கூட்டுறவு முறைப்படி இந்த ஆலையை நிறுவவேண்டுமென்றும், டாக்டர் அம்பலவாணர் கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

கட்சிக்கு கிராமங்கள் தோறும் கிளைகள் நிறுவுவதற்காகவும், கட்சியின் கொள்கைகளை பிரசாரம் செய்வதற்காகவும் கட்சிக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்காகவும் நான்கு பேர்கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

பல அரசாங்க ஊழியர்கள் இக்கட்சிக்குப் போதிய ஆதரவு அளித்துள்ளார்களென்றும், அவர்கள் தங்களின் பெயர்களை வெளியிட வேண்டாமெனக்கூறியிருப்பதாகவும், இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களும், கைத்தொழில் நிபுணர்களும், இக்கட்சியின் சார்பில் ஆரம்பிக்க இருக்கும், தொழிற்சாலைகளுக்கு இலவச ஆலோசனைகள் தர சம்மதித்துள்ளார்களென்றும், இப்புதிய கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய கட்சியின் தலைமைக் காரியாலயம் கிளிநொச்சியில் இருக்குமென்றும்; விரைவில் கொழும்பில் ஒரு கிளைக் காரியாலயம் நிறுவப்படுமென்றும் தெரிய வருகிறது.

பின் வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்: திரு. ஏ. சிவசுந்தரம் (கிளிநொச்சி எம். பி.), உப-தலைவர்கள்: எஸ். சிவசுப்பிரமணியம் (வழக்கறிஞர், கொழும்பு), திரு. வி. சின்னத்துரை (கராச்சி கிராமசபை தலைவர்), காரியதரிசி: திரு. எஸ். சுப்பிரமணியம், ஜே. பி., உப-காரியதரிசிகள்: திருவாளர்கள்: எம். யோகலிங்கம், ஜே. பி., எம். அருணசலம், தனாதிகாரி: திரு. எம். கே. நல்லதம்பி, உப-தனாதிகாரி: திரு. வி. கே. முருகேசு, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: வி. சிவபாதம், எஸ், எச். ராஜகாரியர், டாக்டர் எஸ். அம்பலவாணர், வி. கந்தையா, எஸ். மயில்வாகனம், வி.வல்லிபுரம், வி, சிவக்கொழுந்து, கே. புண்ணியமூர்த்தி. பிரசாரக் குழு: திருவாளர்கள்: எம். சிவசுந்தரம், எஸ். சுப்பிரமணியம், எம். கே. நல்லதம்பி, எஸ். சிவசுப்பிரமணியம்.

### போதிவிருட்சம் நாட்டப்பட்டது

இன்று இந்தியப் பிரதமர் சாஸ்திரி டில்லி புத்த ஜயந்தி பூங்காவில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதிபண்டாரநாயகா இந்திய மக்களுக்கு அன்பளிப்பு செய்த புனித போதிமரக் கன்றை நட்டுவைத்தார். அநுராதபுரத்திலிருக்கும் புத்தர் ஞானோதயம் பெற்ற போதி விருட்சத்திலிருந்து இது எடுக்கப்பட்டது. அநுராதபுரத்திலிருக்கும் போதிமரம், அசோக சக்கரவர்த்தி தன் புதல்வி சங்கமித்தை மூலம் இலங்கைக்கு அனுப்பிய கிளையேயாகும். இப்போது இலங்கை அதை, இந்தியாவுக்குத் திருப்பிக்கொடுத்திருக்கிறது. பாரதத்திலிருந்த போதிவிருட்சம் பட்டுப்போய்விட்டது.

இதை நாட்டுவதற்காக நடைபெற்ற ஊர்வலத்தில் இரு நாட்டு பிரதம மந்திரிகளும் சென்ருர்கள்.

கிரிக்கெட் டெஸ்ட்

### பாகிஸ்தான்: 414 ஆஸி: 2 - 151

கராச்சி, அக். 25

பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இன்று இரண்டாவது நாளாக நடைபெறும முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் பாகிஸ்தான் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 414 ஓட்டங்கள் எடுத்தது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மக்கன்ஸி 69 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கட்டுகளை வீழ்த்தியிருக்கிருர். மார்ட்டின் 107 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கட்டுகள் விழ்த்தினுர்.

இன்றைய ஆட்ட இறுதியில் ஆஸ்திரேலியா 2 விக்கெட் நஷ்டத்திற்கு 151 ரன்கள் எடுத்தது. லாரி, றெட்பாத் இருவரும் ஆட்டமிழந்தனர். ஸிம்ஸன் 73 ரன்களும், பேர்ஜ் 34 ரன்களும் எடுத்து அவுட் ஆகாமலிருக்கிருர்கள்.

மாஸ்கோ, அக. 26

குருஷ்சேவின் பதவி விலக்கத்துக்கு ஒரு காரணகர்த்தாவாகவிருந்த திரு கஸ்லோவ் தற்பொழுது பீகிங்கில் இருக்கலாமென்று ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. சீன-ரஷ்ய உறவை விருத்தி செய்யும்வகையில் அவர் அங்கு சென்றிருக்கலாமாம்!

# "மூவர் கிரக" பிரயாணிகள் சந்திரமண்டலம் செல்லலாம்

## வீரர் விளாடிமிர் கொமராவ் நம்பிக்கை

மாஸ்கோ, அக். 25

அண்மையில் ரஷ்ய விண்வெளிக்கப்பலில் உலகினை வலம்வந்த மூன்று வான்வெளிப் பிரயாணிகளும் சந்திரமண்டலத்துக்குச் செல்லக்கூடும் என்று வான்வெளி வீரர் விளாடிமிர் கொமராவ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உலகினை வலம் வந்த ரஷ்ய வான்வெளிக்கப்பலை விளாடிமிர் கொமராவ் செலுத்திச் சென்றதும் அவருடன் ஒரு டாக்டரும் ஒரு விஞ்ஞானியும் பிரயாணமானதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

"மூவர் கிரக"த்தில் சென்ற விளாடிமிர் கொமராவ் அளித்த ஒரு டெலிவிஷன் பேட்டியில், சந்திரமண்டலத்துக்கு விரைவில் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டென்றும் அந்தப்பாக்கியம் தங்களுக்குக் கிடைக்கலாம் என்றும் கூறினர்.

விண்வெளிப் பிரயாணியான டாக்டர் தெரிவிக்கையில், சாதாரணமானவர்கள் கூட வான்வெளிக் கப்பலில் பிரயாணம்செய்யலாம் என்றும் கூறினர்.

யாழ்ப்பாணத்தில்

## இரு ரயில்கள் மோதல்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இரு ரயில்கள் மோதிக்கொண்டதில் இரு என்ஜின்களுக்கும் பிரயாணிகள் பெட்டிகள் சிலவற்றுக்கும் சிறிது சேதமேற்பட்டது.

பிற்பகல் நாலரை மணிக்குப் பளைக்கு புறப்பட்ட ரயில்வண்டி பிரதான பாதையில் சென்றுகொண்டிருந்த அதேசமயம் யாழ்ப்பாணம் துறைமுகத்திலிருந்து ரயில் நிலையத்துக்கு வந்துகொண்டிருந்த சாமான் வண்டி பிரதான பாதையுடன் சேரும் வழியில் வந்தது. பிரதான பாதையில் செல்லும் சமயத்தில் இரு என்ஜின்களும் இலேசாக மோதிக்கொண்டதுடன் சில பிரயாணிகள் பெட்டிகளுக்கும் சிறிது சேதம் ஏற்பட்டது.

இச்சம்பவம்பற்றி அனுராதபுரத்திலிருந்து ரயில்வே இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்து நேற்று நாள்முழுவதும் விசாரணை செய்தார்.

## ஜப்பான் பிரதமர் ராஜிநாமா செய்தார்

டோக்கியோ, அக். 25

ஜப்பானிய பிரதமர் திரு. இக்கேடா தாம்பதவியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டதாக இன்று அறிவித்தார். தற்போது ஆஸ்பத்திரியில் சுகவீனமுற்றிருக்கும் அவர் தமது முடிவை அரசாங்கத் தலைவர்களிடம் கூறியிருக்கிருர் 1960ம் ஆண்டு இக்கேடா ஜப்பானிய பிரதமரானுர்.

## கமிஷனர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் முனிசிபல் கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்கா இவ்வருடம் டிசம்பர் முதல் திகதியுடன் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்கிருர்.

மாத்தளையிலிருந்து திரு ஏ. எச். ஏ.சாமி என்பவர் யாழ்ப்பாணம் முனிசிப்பல் கமிஷனராகப் பதவியேற்பார்.

போன்: 296 தந்தி: 'ரோகிணி'

தீபாவளி விற்பனை அழைப்பு

19-10-64 தொடக்கம் 3-11-64 வரை

S. R. S.

ஜவுளி மாளிகையில்

மங்களகரமான தீபாவளிப் பண்டிகைக்காக
ஏராளமான பிடவைத்தினுசுகளை வரவழைத்திருக்கிறேம்.

தங்களுக்கு தேவையான ஜவுளித்தினுசுகளை
முன்னதாகவே வந்து தெரிவு செய்யுங்கள்.

சென்ற ஆடி மாதம்
மலிவு விற்பனை செய்த ஜவுளிமாளிகை

எஸ். ஆர். செல்லத்துரை

(கதிரேசன் கோவிலுக்கும் மிட்டாஸ் கடை சந்திக்கும் இடையில் உள்ளது)
216, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மணிவாக்கு

"சமுதாயம் முழுவதும் கூட்டுறவில் சேர வேண்டும். பொருளாதாரத் துறையுடன் சமூகம் மற்றும் இதர துறைகளிலும் கூட்டுறவு வேண்டும். வாழ்நாள் இறுதிவரை கூட்டுறவு வேண்டும்.

— விநோபாஜி


ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna

Telegrams: EELA NADU Jaffna

Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி மீ 10 உ. (26 10-64)


## பொறுப்பற்ற பேச்சு!

"திருக்கோணமலையை 'தமிழரசுக் கோட்டை' என்று தமிழரசுவாதிகள் எண்ணி வருகின்றனர். இந்த எண்ணத்தை நாம் அடுத்த பொதுத்தேர்தலிலாவது முறியடிக்க வேண்டும். இதற்கு முன்னோடியாக, கட்சி வேறுபாடின்றி சிங்களவர் ஒருவரை அபேட்சகராக நிறுத்த எல்லாச் சிங்களக் கட்சிகளும் முன்வர வேண்டும்" என்று உதவி தபால் தகவல் அமைச்சர் திருக்கோணமலை அபயபுரப்பகுதியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் கூறியதாக ஒரு செய்தி கூறுகிறது. இதில் உண்மையிருப்பின் இந்த உதவி அமைச்சரையிட்டு அரசாங்கம் நிச்சயம் பெருமை கொள்ள முடியாது.

திருக்கோணமலை, தமிழரசுக் கட்சிக்கு மட்டும் உரிய இடமல்ல. அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சீதனம் வழங்கப்பட்டதல்ல. தங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யாரை, எந்தக் கட்சிப் பிரதிநிதியைத் தெரிவு செய்ய வேண்டுமென்பது அங்குள்ள மக்களின் சுயநிர்ணய உரிமை. "உங்கள் உரிமைகளைப் பாதுகாப்போம். உங்களுக்கு வாழ்வழி செய்து கொடுப்போம். எங்களுக்கு உங்கள் வாக்குரிமையை அளியுங்கள்" என்று எந்தக்கட்சியும் அல்லது தனிப்பட்ட அபேட்சகர் எவரும் தேர்தலுக்கு வாக்குக் கேட்பதில் தவறில்லை. அரசியல் கட்சி எதுவும் தனது கொள்கைகளை மக்கள்முன் எடுத்து விளக்கலாம், தாங்கள்தான் மக்களுக்கு வாழ்வளிக்கத் தகுதியுடையவர்கள் என்றும் அவர்கள் கூறலாம், அதில் தவறு இருக்க முடியாது. ஆனால் தனது கட்சிக் கொள்கைகளையும் திட்டங்களையும் எடுத்து விளக்குவதற்குமாறாக அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஒரு உதவிமந்திரிப் பதவியை வகிக்கும் ஒருவர் வகுப்புவாத முறையில் பேசியிருப்பது பல இனமக்கள் கலந்து வாழும் திருக்கோணமலையின் அமைதிக்கு மட்டுமல்ல நாட்டின் அமைதிக்கே நல்லதல்ல. தமிழ்ப்பகுதிகளில் தமிழ்ப் பேசும் மக்களின் பலத்தைக் குறைத்து சிங்கள ஆதிக்கத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் குடியேற்றத்திட்டங்களின் நோக்கம்" என்ற தமிழரசுக்கட்சியின் குற்றச்சாட்டை அரசாங்கம் இதுவரை தனது நடவடிக்கைகள் மூலம் நிரூபித்து வந்திருக்கிறது. இப்பொழுது உதவி அமைச்சரின் கூற்றும் இதைச் சந்தேகத்துக்கிடமின்றி ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது. இது, சுதந்திரம் பெற்றபின் பல இன்னல்களையும் அனுபவித்துவரும் தமிழ்பேசும் மக்கள் தங்கள் கலாசாரத்தையும் பிரதேசத்தையும் இழந்துவிட வேண்டி நேருமோவென பீதியடையச் செய்வதுடன் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவுமுள்ளது.

மலைநாட்டில் தமிழரசுக்கட்சி கால் எடுத்துவைக்கமுடியாது என்று பொறுப்புள்ள மந்திரிகள் சிலர் சிலவருடங்களுக்கு முன் பேசியதைவிட உதவி அமைச்சர் திருக்கோணமலையில் இவ்விதம் கூறியிருப்பது ஆச்சரியமில்லையென்பது உண்மையே!

எனினும் வகுப்புத் துவேஷத்தை பரப்பியதனாலும் துவேஷப்பிரசாரத்தைமுளையிலேயே கிள்ளியெறியத் தவறியதனாலும் நேர்ந்த விளைவுகளை 1958-ம் வருடத்தில் கண்ணால் கண்ட பின்னும் பொறுப்புள்ள பதவிகளில் இருப்பவர்களே இவ்விதம் நடந்து கொள்வது துரதிர்ஷ்டம். இனியும் இவ்வித பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும் அரசாங்கம் அனுமதியளிக்கக் கூடாது. வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிடக்கூடிய முறையில் பேசிய உதவி அமைச்சர் மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இதுபோன்ற பொறுப்பற்றவர்களின் செயல்களினாலும் பேச்சுக்களினாலும் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அரசாங்கமும் பொறுப்பேற்றுத்தானாக வேண்டும். உதவி அமைச்சர் திருகோணமலையில் தாம் அவ்விதம் பேசியிருந்தால் அதை உடனடியாக வாபஸ்பெறுவதே நல்லது. அரசாங்கத்தின் நோக்கத்தையே அவர் வெளியிட்டிருந்தால் அதையும் உடனடியாகத் தெளிவுபடுத்திவிடுவது சாலச் சிறந்தது.

# "கடவுள் பக்தியும் கடின உழைப்பும் அவசியம்"

## வித்தியாலய மாணவர் விருந்தில் நீதியரசர் தம்பையா புத்திமதி

### மூன்றுமொழிகள் கற்கவேண்டிய அவசியம் பற்றி மீண்டும் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

"வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இளைஞர்களுக்கு கடவுள் பக்தியும் கடின உழைப்பும் அவசியம்'' என்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய எச். எஸ். ஸி. யூனியன் வருடாந்த இரவு விருந்துபசாரவைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்ற சனிக்கிழமை இரவு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இருநூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

எச். எஸ். ஸி. யூனியன் தலைவர் திரு. கே. சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்தில் நீதியரசர் டாக்டர் தம்பையா, கல்வியின் அவசியத்தையும், கல்வியை கசடற கற்கவேண்டியதையும் எடுத்துக் கூறினார். யாழ்ப்பாணத்தில் கல்லூரி அதிபர்களின் தன்னலமற்ற சேவைகளையும் அவர் சுட்டிக்காட்டினார். மாணவர்களின் ஒழுக்கம் பற்றியும் இதற்கு ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டியது பற்றியும் நீதியரசர் கூறினார்.

கல்லூரிப் படிப்பு முடிந்தபின் மாணவர்கள் தமக்கேற்ற தொழில்துறையைத் தெரிவு செய்துகொள்ளவேண்டுமென்றும் ஒரு துறையில் நன்கு முன்னேறக்கூடிய ஒருவரை வேறு ஒரு துறையில் நிர்ப்பந்தமாகத் தள்ளிவிட்டால் அவரது முன்னேற்றம் பாதிக்கப்படுமென்றும் கூறிய நீதியரசர் அந்நிய ஆதிக்கம் நீங்கி, நாடு விடுதலையடைந்து பதினைந்து ஆண்டுகளாகிவிட்டனவென்றும் சட்டம், வைத்தியம், பொறியியல் ஆகிய துறைகளில் மாணவர்கள் பிரவேசிக்கவேண்டுமென்றும் யோசனை கூறினார். சட்டம், வைத்தியம், பொறியியல் துறைகளில் ஈடுபட்டவர்களின் முன்னேற்றத்தையும் பணிகளையும் அவர் எடுத்துக் காட்டினார்.

#### ஆங்கிலத்தில் தான் விமோசனம்

"தொழில் துறைகளில் முன்னேறவும் விஞ்ஞான அறிவைப் பெறவும் உலகமொழியான ஆங்கில அறிவு அவசியம். ஆங்கிலக் கல்வியைப் புறக்கணிப்பது மக்களுக்கும் சமுதாயத்துக்கும் பெருந்தீங்கையே விளைக்கும். தாய்மொழிக் கல்வி அவசியம்தான், ஆரம்பகாலக் கல்வியைத் தாய்மொழியில் பெறுவதுடன் தாய்மொழியைத் தொடர்ந்தும் விரித்தி செய்துகொள்வது நல்லதே. நமது தாய்மொழியாம் தமிழில் சிறந்த இலக்கியங்களும் நல்ல நூல்களும் உள்ளன. அவற்றைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லை. அறிவு வளர்ச்சிக்கு அவைகளைக் கற்கத்தான் வேண்டும், அதே சமயம் தொழிற்துறையில் முன்னேறுவதற்கு தமிழ்மொழி உபயோகம் தராது ஆங்கிலம் அதற்கு அவசியம். ஆங்கிலத்தில்தான் நமது மக்களின் விமோசனம் தங்கியுள்ளது" என்று நீதியரசர் கூறினார். ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதற்கு பல நூல்களையும் நன்கு வாசிக்கவேண்டும் என்றும் வாசிக்கும் பழக்கம் மிக மிக அவசியமென்றும் அவர் எடுத்துக்காட்டினார். தமிழ், ஆங்கிலம்மட்டுமல்லாது இங்கு பெரும்பான்மையினராகவுள்ள நமது சகோதர மக்களின் மொழியாகிய சிங்களத்தையும் கற்கவேண்டுமென்றும் உத்தியோகத்துக்கோ வேலைக்கோ செல்லும்பொழுது "நீர் எனது மொழியைப் படித்தால்தான், நான் உமது மொழியைப் படிப்பேன்" என்று வேலை தருபவரைப் பார்த்துக் கூற முடியாதென்றும்' கூறினார். தான் அரசியல்பற்றியோ, மொழிப்பிரச்னை பற்றியோ பேசவில்லையென்றும் உண்மை நிலைமையையே எடுத்துக் கூறுவதாகவும் நீதியரசர் கூறினார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்பதால் முன்னேற்றம் கிடைக்குமென அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களின் ஒழுக்கம் பற்றி நீதியரசர் குறிப்பிடுகையில் இன்று இலங்கையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் குற்றச் சம்பவங்களுக்கெல்லாம் மதுவேதான் காரணமென்றும் கூறினார். "இங்கு ஒவ்வொரு பனைமரத்தின் கீழும் தவறணை இருக்கிறது. பனங்கள் உடலுக்கு நல்லதென்று கூறிக்கொள்கிறார்கள். இங்கு பனங்கள்ளும் மற்றொருவிதமான கசிப்பு போலவே இருக்கிறது" என்று நீதியரசர் கூறினார்.

மாணவர்கள் ஒழுங்கான வாழ்வு வாழவேண்டும். அவர்களுடைய எண்ணம், செயல் யாவும் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கவேண்டுமென்றும், கடவுளிடம் பாரத்தைப்போட்டு கடினமாக உழைத்தால் வாழ்வில் நிச்சயம் முன்னேற்றம் கிடைக்குமென்றும் நீதியரசர் கூறினார்.

இதன்பின் கல்லூரிக்கு வாழ்த்துத் தெரிவித்து காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் பேசுகையில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் முன்னேற்றத்தையும் அதற்காக உழைத்துவரும் அதிபர் அம்பிகைபாகனையும் அவருக்கு உதவியாகப் பணியுரியும் உதவிய திபர் திரு. வி. வைரமுத்து, திரு. து. சீனிவாசகம் ஆகியோரையும் பாராட்டவேண்டுமென்றார்.

கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பதிலுரை நிகழ்த்தியபின் செல்வி சரஸ்வதி ராஜநாயகம் விருந்தினர்களை வாழ்த்திப் பேசினார். திரு. சோமதிலகம் பதிலுரை நிகழ்த்தினார்.

## தொண்டமான், அஸீஸை அழைக்க மறுத்தேன்?

### இலங்கை விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமானையும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. அஸீஸையும், நேற்று புதுடில்லியில் ஆரம்பமான இலங்கை - இந்தியர் பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு அவர்களின் கருத்தை தெரிவிக்க அனுமதியளித்தால் இந்தியர்களுக்கு எதிரான கருத்தை உடையவர்களையும், இப்பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்கவேண்டும்.

திரு. தொண்டமானையும், திரு. அஸீசையும் புதுடில்லியில் நடக்கும் இலங்கை - இந்தியர் பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற புதுடில்லியில் எடுக்கப்பட்ட சில முயற்சிக்கு இலங்கை மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளது.

இப்பேச்சுவார்த்தைகளில்

(6-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக்கடிதம்

## இலங்கை வானொலி

செய்திகளைத் துரிதமாக அறிவிப்பதில் எப்போதுமே இலங்கை வானொலிக்கு ஒரு தனி இடமுண்டு. உதாரணம் இதோ.

சென்ற வெள்ளிக்கிழமை டோக்கியோ ஒலிம்பிக்கில் காலை 10-40 க்கு சாம்பியன் பட்டத்துக்கான ஹாக்கி ஆட்டம் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே நடைபெற்றது. பகல் 12-10 க்கு இந்தப் போட்டியின் முடிவு அறிவிக்கப்பட்டது. ஆனால் இலங்கை வானொலி தனது பகல் ஒலிபரப்பில் கீழ்க்கண்டவாறு ஒலிபரப்பிற்று. பகல் ஒலிபரப்பு 12-45 க்கு வெளியாகிற்று.

"இன்று டோக்கியோவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெறவிருக்கும் ஹாக்கி இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் தனது உலக சாம்பியன் பட்டத்தை பாதுகாத்து, தங்கப் பதக்கத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது"

ஆனால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவின்படி இந்தியா வெற்றி பெற்றிருந்தது.

இலங்கை வானொலியின் சிறப்பான சேவைக்கு மற்றோர் எடுத்துக்காட்டு இதோ.

கல்கத்தாவில் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா தன் முதல் இன்னிங்ஸில் 235 ரன்கள் எடுத்து அவுட் ஆனபின், இந்தியா அன்றுகாலை ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு எடுத்த ரன்களை இலங்கை வானொலி ஒலிபரப்பியது. (இவை தமிழ் ஒலிபரப்புக்கள்)

"ஆகாசவாணி, எனக்குறிப்பிடப்படும் இந்திய வானொலி எப்படி நடந்துகொள்கிறதென்பதற்கு ஒரு உதாரணம்:

ஆகாசவாணி சமீபத்தில் தனது செய்தி ஒலிபரப்பை நிகழ்த்திக்கொண்டிருந்தது. ஆனால் அதை இடையில் முறித்துவிட்டு பின்வருமாறு கூறிற்று:

இதோ இப்போது வந்தது ஒரு முக்கிய செய்தி. "சோவியத் பிரதம ராணுவப் படைத் தளபதியும், மற்றும் 30 பேரும் வந்துகொண்டிருந்த யூகோஸ்லேவிய விமானம் ஒன்று பெல்கிரேடுக்கருகில் நொறுங்கியதால் அனைவரும் மாண்டனர்."

லண்டன் பி. பி. ஸி. சில மாதங்களுக்குமுன் தனது செய்தியை இடையில் முறித்து "சோவியத் விண்வெளிவீரர்களின் குரல் இப்போதுதான் வந்தது" எனக் கூறி ஒலிபரப்பிற்று.

கடச்சுட செய்திகிடைக்கும் என்ற நோக்கத்திற்காகவே பலர் ரேடியோக்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் உலக நிகழ்ச்சிகளை அறிய ஆவல் கொள்ளும் எவரும் வெளிநாட்டு வானொலிகளையே நம்ப வேண்டியிருப்பது, நிச்சயம் இலங்கை வானொலியின் பெருமைக்கு உகந்ததல்ல.

மூ. முருகன்,

யாழ்ப்பாணம்.

கொடிகாமம், திங்கள்

நாகர் கோவிலிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏராளமான மீன்பெட்டிகளும், கடகங்களும் ஏற்றப்படுவதால், பஸ்ஸில் துர்நாற்றம் வீசுவதோடு, மற்றப் பிரயாணிகள் அந்த பஸ்ஸில் ஏறத் தயங்குகிறார்கள்.

நாகர் கோவிலுக்கும், பருத்தித்துறைக்குமிடையிலுள்ள பள்ளிக்கூடங்களிலிருந்து ஏறும் பாடசாலை மாணவர்களும் உத்தியோகத்தர்களும், மீன் ஏற்றி வரும் பஸ்ஸில் ஏறத் தயங்குவதால், அந்த பஸ் தினமும், மீன் விற்கும் பெண்களுக்காகவே சேவைசெய்துவருகிறது.

இவ்விஷயம்பற்றி பொதுமக்கள் பலதடவை பருத்தித்துறை டிப்போவிற்கு முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

# யுத்த நெருக்கடி மீண்டும் தோன்றலாம்!

## "சர்வாதிகார ஆட்சி பாகிஸ்தானில் கிடையாது"

### அயூப்கான் அறிவிப்பு

கராச்சி, அக். 26

"சர்வாதிகார ஆட்சி முறையை நான் பின்பற்றுவதாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். அப்படியானகொள்கையுடையவனாக நான் இருந்தால் வாக்குரிமை அளிக்கும்படி ஏன் நான் மக்களைக் கோரவேண்டும்!" என்று பாகிஸ்தான் அதிபர் பீல்ட மார்ஷல் அயூப்கான் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று இங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அதிபர் அயூப்கான் பேசுகையில்தான் மேற்கண்டவாறு கூறினார். இந்தக் கூட்டத்துக்குச் சமார் மூன்று லட்சம் பேர் சமூகமளித்திருந்தனர் என்று ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்றன.

அதிபர் அயூப்கான் தொடர்ந்து பேசுகையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி மக்களுக்குரிய தலைவனை மக்களாகவே தேர்ந்தெடுக்கச் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கையில் சர்வாதிகார ஆட்சி என்று கூறுவது பொருந்தாது என்றும் தமது நிர்வாகத்தின்கீழ் எத்தனையோ உள்நாட்டுப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு, நாடு முன்னேறிக்கொண்டு வருவதாகவும் கூறினார்.

## ஐ.நா.வின் நிதி நிலைமை குறித்து யுதாண்ட் எச்சரிக்கை

### அமைதியை நிலைநாட்டக் கோரிக்கை



நியூயோர்க், அக். 25

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிதி நெருக்கடிகள் தீர்க்கப்படாவிட்டால், கடந்த இரண்டு மகாயுத்த காலங்களில் உலகம் கண்ட கோரமான விளைவுகளை, மீண்டும் காணக்கூடிய நிலைமை உருவாகலாம் என்று ஐக்கிய நாடுகள் பிரதம காரியதரிசி யுதாண்ட் நேற்று இங்கு நிகழ்ந்த ஐக்கிய நாடுகள் தினக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

"உலக அமைதி அபாயத்திலிருக்கிறது. கவலைக்கிடமான பல விளைவுகள் ஏற்படலாம்" என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

ஐ.நா. தினம் நேற்று உலகின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. ஐ.நா.வின் இலட்சியங்களை நிறைவேற்ற ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நாடுகள் உறுதி கொண்டன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் ஐ.நா. பிரதம காரியதரிசி யுதாண்ட், ஐ.நா.வை எதிர்நோக்கியுள்ள நிதிநெருக்கடியினால் தோன்றக் கூடிய விளைவுகள் குறித்து அச்சம் தெரிவித்தார்.

"ஐ.நா.வின் சமாதானப் படையைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு நிதி நிலைமை திருப்திகரமாகவில்லை. ரஷ்யா, பிரான்ஸ் உட்பட பல நாடுகள் தங்களது நிதியை இன்னும் செலுத்தாமல் இருக்கின்றன. இதனால் நெருக்கடி நிலவும் பகுதிகளில் சமாதானத்தை நிலைநாட்ட ஐ.நா.வினால் முடியாமல் இருக்கின்றது. இதனால் உலகில் மீண்டும் யுத்த அபாயம் தோன்றி கவலைக்கிடமான பல விளைவுகள் ஏற்படலாம்" என்று யுதாண்ட் தெரிவித்தார்.

யுத்த அபாயம் தோன்றக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டாலும் உலக நாடுகள் இப்பொழுது அமைதியைத்தான் அதிகம் விரும்புகின்றன என்றும் உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட, நாடுகள் உறுதியெடுக்கவேண்டுமென்றும் யுதாண்ட் கேட்டுக்கொண்டார்.

## குருஷ்சேவ் மர்மம்

மாஸ்கோ, அக். 25

திரு. குருஷ்சேவ் எங்கிருக்கிறார் என்பது இன்னமும் பெரிய மர்மமாகவிருக்கிறது. அவரைப்பற்றி உண்மையான தகவல் எதுவும் தெரியாததால் பலதரப்பட்ட வதந்திகள் உலாவிக் கொண்டிருக்கின்றன.

மாஸ்கோவுக்கு அருகில் ஒரு வீட்டில் கண்காணிப்பின்கீழ் வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார் என்று வேறு சில செய்திகள் கூறுகின்றன.

## வில்ஸன் அழைப்பு: ஸ்மித் நிராகரிப்பு

லண்டன், அக். 25

தென்ரொடீஷிய சுதந்திரம் பற்றி பேச்சுக்கள் நடத்த அடுத்தவாரம் லண்டன் வருமாறு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட்வில்சன் விடுத்தஅழைப்பை ரொடீஷிய பிரதமர் திரு. ஸ்மித் நிராகரித்துள்ளார்.

## ஸாம்பியா உதயமானது

லண்டன், அக். 24

ஆபிரிக்கநாடான வடரொடீஷியா நேற்று நள்ளிரவுமுதல் சுதந்திரமடைந்தது. இந்தநாடு ஸாம்பியா குடியரசு என்ற பெயருடன் இனி வழங்கப்படும். 70 வருட பிரிட்டிஷ் ஆட்சியின் பின்னர் இந்தநாடு விடுதலை பெற்றுள்ளது.

## எதிர் நடவடிக்கை

கோலாலம்பூர், அக். 27

மலேசிய பிரச்னை சம்பந்தமாக பிலிப்பைன்ஸ் தெரிவித்த ஒரு யோசனையை மலேசியா நிராகரித்துள்ளது.

## அடுத்த ஒலிம்பிக் மெக்ஸிக்கோவில்

டோக்கியோ, அக். 25

டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் விழா, நேற்று கவர்ச்சிமிக்க நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது. அடுத்த ஒலிம்பிக் விழா 1968-ம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடைபெறும்.

## யோசனை நிராகரிப்பு

மிஸிஸிப்பி, அக். 25

சிவில் உரிமை ஸ்தாபனமொன்றின் ஆதரவில் இங்கு விடுதலை பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஒரு விமானம் ஒருவகையான குண்டை வீசியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் எவரும் பாதிக்கப்படவில்லை.

## மணிவாசகர்சபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

காரைநகர் மாணிக்கவாசகர் சபையின் 24-வது வருடாந்தக் கூட்டம் காரைநகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறறது. திரு. ச. சபாபதி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. ச. சபாபதி, உபதலைவர் திரு. என். சபாரத்தினம், திரு. வே. சுப்பிரமணியம், இணைக்காரியதரிசிகள் வித்துவான் க. முருகேச, மு. கண்மணிராசா, தனதிகாரி திரு. க. நல்லதம்பி.

## அயூப்கான் ஆட்சிமீது நம்பிக்கை இழந்துவிட்டனர்

### செல்வி ஜின்னு கருத்து

டாக்கா, அக். 25

"அயூப்கான் தமது செல்வாக்கை இழந்துவிட்டார்; ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அவருக்கு எதிராகவே வாக்களிப்பார்கள்" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் செல்வி பாத்திமா ஜின்னு தெரிவித்தார்.

கிழக்குப் பாகிஸ்தானில் எட்டுத் தினங்கள் தேர்தல் பிரசாரம் நடத்திவிட்டு செல்வி பாத்திமா ஜின்னு நேற்று திரும்பினர்.

"ஜனாதிபதி அயூப்கானின் ஆட்சி சர்வாதிகாரமுறையிலானது. அது எந்த முறையையும் பின்பற்றுவதல்ல. மக்கள் மனஉறுதியுடன்தான் இருக்கிறார்கள். ஆனால் பணத்தைக் கண்டு மக்கள் மனம் தளர்ந்தால் எதுவும் நடக்கலாம்" என்றும் தெரிவித்தார்.

## உணவு நிலைமை மோசம்

ராவல்பிண்டி, அக். 25

இந்தியாவில் 75 கிராமங்களில் உணவு நிலைமை மோசமாக இருப்பதாகப் பாகிஸ்தான் வானொலி அறிவித்துள்ளது.

தென் வியட்னும்

## சிவிலியன் அதிபரானர்

சைகோன், அக். 26

தென் வியட்னுமின் அதிபராக ஒரு சிவிலியன் நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத்தைச் சேராதவர் ஒரு தலைவராக இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். புதிய தலைவர், முன்னர் என்ஜினியராக இருந்தார்.

புதிய பிரதமரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதற்கும் தயார்!

வாஷிங்டன், அக். 25

அமெரிக்காவின் பலம் முந்திய வருடங்களை விட அதிகமாக விருக்கிறதென்றும் எந்த நடவடிக்கையையும் சமாளிக்க அமெரிக்கா தயாராக விருக்கிறது என்றும் அதிபர் ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் செனட்டர் கோல்ட் வாட்டர் "அமெரிக்காவின் இராணுவ பலம் குறைந்து விட்டது" என்று கண்டித்திருந்ததற்கு பதிலளிக்கையில் தான் அதிபர் ஜோன்ஸன் மேற்கண்டவாறு கூறினார்.

## ஸாம்பியா

லண்டன், அக். 25

ஸாம்பியா, நடுநிலைமைக் கொள்கையைப் பற்றி நிற்கும் என்று ஸாம்பியாவின் அதிபர் கெனத் கௌவுண்டா நேற்று அறிவித்தார். ஸாம்பியா குடியரசுதின நிகழ்ச்சிகளில் 60க்கும் அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## 'நிலைமை திருப்தி'

### இந்திய இராணுவம் குறித்து சவான்

பம்பாய், அக். 26

நேற்று நிருபர்கள் கூட்டமொன்றில் இந்திய பாதுகாப்பு மந்திரி சவான் பேசுகையில், இந்திய இராணுவம் நல்ல நிலைமையில் இருக்கிறதென்றும் எல்லை நெருக்கடிகளைச் சமாளிக்க அவை தகுதி பெற்றிருக்கிறதென்றும் கூறினர்.

சீன அணுகுண்டு பற்றி குறிப்பிடுகையில்; வழக்கமான நிலைமையில் கூட சீனவினல் எமக்கு அபாயம் இருக்கையில் அது அணுகுண்டுகளை உற்பத்தி செய்தால் அபாயம் அதிகரிக்கத்தானே செய்யும் என்று தெரிவித்தார்.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

கார்டூம், அக். 25

சூடான் தலைநகரமான கார்டூமில் நேற்று பாடசாலை மாணவர்கள் அமெரிக்க தூதரகத்துக்கு முன் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். இங்கு பத்திரிகைக்காரியாலயமொன்று தீக்கிரையானது.

## மாஸ்கோ செல்வர்

பாரிஸ், அக். 25

பிரெஞ்சு கம்யூனிஸ்ட்கட்சியின் தூதுகோஷ்டியொன்று அண்மையில் மாஸ்கோ செல்லவிருக்கின்றது. திரு. குருஷ்சேவ் பதவி விலகல் குறித்து உண்மையான விபரங்களை அது கண்டறியும்.

## பெல்கிரேட்டில் ஸ்ரீமதி இந்திரா

பெல்கிரேட், அக். 25

யுகோஸ்லேவியாவில்மூன்று தினங்கள் சுற்று விஜயம் செய்யும் பொருட்டு இந்திய ஒலிபரப்பு மந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று பெல்கிரேட் வந்து சேர்ந்தார்.

ஐ. நா. வில்

## சீனவுக்கு இடம் கிடைப்பது அசாத்தியமாகிறது

### அமெரிக்க அதிகாரிகள் அபிப்பிராயம்

வாஷிங்டன், அக். 25

அணுகுண்டை வெடித்து, அணுஆயுதப் பரீட்சையில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் சீன விரும்புவதால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அதற்கு அங்கத்துவம் கிடைப்பது இப்பொழுது அசாத்தியமாகிக் கொண்டு வருகிறது என்று அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"சீனவுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று முன்னர் விருப்பம் கொண்டிருந்த பல நாடுகள் சீனவின் அணுகுண்டு வெடிப்பினால் மனம் மாறிவிட்டன. இதனால் சீன இனிமேல் ஐ.நா.வில் இடம் பெறுமா என்பது சந்தேகத்துக்குள்ளாகி விட்டது" என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சீன அணுகுண்டை வெடித்ததை பல நாடுகளும் கண்டித்துள்ளன. ஐ.நா.தினத்தை நேற்றுக் கொண்டாடிய பல நாடுகள், சீனவின் விபரீதமான போக்கை வெளிப்படையாகக் கண்டித்திருக்கின்றன.

கான அதிபர் நிக்ருமா, சீனவின் அணுகுண்டு வெடிப்பைக் கண்டித்து முழுபபடை குறைப்பு உடன்பாடு ஏற்பட வேண்டுமென்று யோசனை தெரிவித்துள்ளார்.

## விசித்திர பிரசாரம்!

### அமெரிக்க ஜனதிபதி தேர்தலில்!

டெக்ஸாஸ், அக். 26

செனட்டர் கோல்ட்வாட்டரை ஆதரிக்கும் முகமாக கடந்த வெள்ளிக்கிழமை வெளியான பத்திரிகையொன்றில், முழுப்பக்க விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. "ஜோன்ஸன் விரைவில் காலமாவார்" என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது!

"இருதய நோய் காரணமாக திரு. லிண்டன் ஜோன்ஸன் அதிககாலம் வாழமுடியாதிருக்கிறார். அவர் நீண்டகாலம் பதவிவகிக்கமாட்டார் என்று இருதய நோய் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்" என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இருதய நோல் நிபுணர் டாக்டர் மைக்கல் டிபாகே இது பற்றித் தெரிவிக்கையில் இது பொறுப்பற்ற விஷமத்தனமானதேர்தல் பிரசாரம் என்று கூறினர்.

# "தமிழின் வளர்ச்சியை எச்சக்தியும் அழிக்கமுடியாது"

## கோப்பாய் இலக்கிய விழாவில் பாலசுந்தரம் எம். பி. பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு

"இந்நாட்டிலிருந்து தமிழ் மொழியை, அதன் வளர்ச்சியை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தவோ அன்றி அழித்துவிடவோ முடியாது. தமிழ்மக்கள் இன்று விழிப்புற்றுவிட்டனர். அவர்கள் விழிப்புடனிருக்கும்வரை தமிழ் வாழத்தான் செய்யும். தமிழ் மக்கள் தங்கள் மொழியைப் பேணுதுவிடில் தங்கள் இலக்கியங்களைப் படிக்காதுவிடில், தங்கள் இலக்கியகர்த்தாக்களை மதிக்காதுவிடில் தமிழ் வளர்ச்சி தடைப்படுமே தவிர வேறெந்தச் சட்டங்களினாலும் அதன் வளர்ச்சியைத் தடுக்க முடியாது."

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் நேற்றுக்காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் தாமோதரனார் அரங்கில் நடைபெற்ற இலக்கிய விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளின் போது உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

வலிகாமம் கிழக்கு உள்ளூராட்சிமன்றங்களின் ஆதரவில யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் இவ்விலக்கியவிழா நேற்றுக்காலை 10-30 மணிக்கு கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை மாணவிகளின் தமிழ் வணக்கத்துடன் ஆரம்பமானது. கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. சி. சின்னத்துரையின் வரவேற்புரையைத் தொடர்ந்து நீர்வேலி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். அப்பாத்துரை விழ வைத் தொடக்கி வைத்து வைத்துப் பேசினர்.

நமது தமிழிலக்கியங்களின் சிறப்பை நினைவூட்டும் நோக்குடனும் நமது நாட்டில்வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றிய புலவர் பெருமக்களை, அறிஞர்களைப் போற்றும் நோக்குடனும் எடுக்கப்படும் இவ்விழா தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பயன் நல்குமென அவர் தமது உரையில் குறிப்பிட்டார். உள்ளூராட்சி மன்றங்களும், சனசமூகநிலையங்களின் சமாசமும் இணைந்து நின்று எடுக்கும் இவ்விழா இலங்கை முழுமைக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாகுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. பாலசுந்தரம் மேலும் பேசுகையில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை 400 ஆண்டுகளின் பின்னர்தான் ஆங்கில இலக்கிய உலகு மதிக்க முற்பட்டதென்றும், இன்று அவர் உலகம் போற்றும் நாடகாசிரியராகத் திகழ்கிறாரென்றும் அதேபோன்று நமது இலக்கியகர்த்தாக்களையும் நாம் போற்றிப் பாராட்டக்கடமைப் பட்டவர்களாவோமென்றும் கூறினர். எழுத்தாளர்களை, கலைஞர்களை மக்கள் ஆதரிக்காவிடில் நாட்டில் இலக்கியமோ கலைகளோ வளம்பெற முடியாதென்றும், தமிழ் வளர வேண்டுமாயின் தமிழ் மக்கள் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் நல்லாதரவு அளிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

திரு. க. சுந்தரமூர்த்தி நன்றி கூறினர்.

நண்பகல் நடைபெற்ற விருந்திற்குத் தலைமைவகித்த கேட் முதலியார் தியாகராஜா பின்வருமாறு குறிப்பிட்டார்:

### இலக்கியத்தில் அரசியல்

"இலக்கியத்தின் பெயரால் இன்று அரசியல் பிரசாரமே அதிகம் நடைபெறுகிறது. இது இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியமாட்டாது. இலக்கியம் படைப்போர் இதனை நன்குணர வேண்டும். அரசியல் பிரசாரக் கருவியாக இலக்கியத்தைப் பயன்படுத்துவதை விடுத்து அதனைச் சமுதாய சீர்திருத்தத்திற்கு ஏற்ற கருவியாக, மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் பாவிக்க வேண்டும்."

கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் இவ்வைபவத்தில் பேசுகையில் இலக்கியத்திலிருந்து அரசியலை முற்றாக ஒதுக்கிவிட முடியாதென்றும் அரசியல் சிறப்புக்கு வழிகாட்டும் வன்மை இலக்கியத்திற்குண்டென்றும் குறிப்பிட்டார். உலக இலக்கியங்கள் பலவற்றிலிருந்து மேற்கோள் காட்டி அவர் தமது உரையை நிகழ்த்தினர்.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை பேசுகையில், கிராமப்புறங்களில் இன்று தமிழுணர்ச்சியும், கலையுணர்ச்சியும் பொங்கிப் பிரகாசிப்பதற்குக் காரணம் சனசமூகநிலையங்களின் சமாசத்தின் சீரியமுயற்சிகள்தானென்றும் வடபகுதியில் இன்று தமிழிலக்கியவிழாக்கள் அடுக்கடுக்கு நிகழ்வது இப்பகுதி மக்களின் விழிப்புணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகவும் கூறினர். சமாசச் செயலாளர் திரு. க. துரைசிங்கம் நன்றி கூறினர்.

அடுத்து நடைபெற்ற பட்டிமன்றத்திற்குத் தலைமைவகித்த செல்வி சந்தனநங்கை கந்தப்பு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் நந்தமிழ்நாட்டின் பண்பாட்டை, மக்கள் தம் வாழ்க்கைக்குரிய உயர்ந்த நெறிகளை அழகுறச் சித்தரித்துக்காட்டுகிறது. சாதாரண பிரஜைகளைப் பாத்திரங்களாகக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட இம்மக்கள் காப்பியத்தைப் போன்று சிறந்ததோர் இலக்கியத்தை உலகில் வேறு எங்கும் காணமுடியாது. மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்ட வல்ல இக்காப்பியத்தை நன்குணர்ந்து நம் வாழ்வை அமைத்துக்கொள்ள முன்வர வேண்டும்."

அவர் தொடர்ந்து பேசுகையில் சிலப்பதிகாரம் தமிழ் நாட்டின் பண்பைச் சித்தரித்துக் காட்டுகின்றதென்றும், மக்கள் வாழ்வைச் சீரிய வழியில் அமைத்தற்கு இத்தகைய உயர்ந்த இலக்கியங்கள் துணைபுரியவல்லனவென்றும் குறிப்பிட்டார்.

சிலப்பதிகாரப் பாத்திரங்கள் பற்றி நிகழ்ந்த இப்பட்டிமன்றத்தில் திருவாளர்கள் மு. சிவானந்தன், க. சிவராமலிங்கம், இ. மகாதேவா, திருமதி வேதவல்லி கந்தையா, திரு. நாவேந்தன் ஆகியோர் முறையே கோவலன், கண்ணகி, மாதவி, பாண்டிமாதேவி பாண்டியன், நெடுஞ்செழியன் ஆகியாம் பாத்திரங்கள் பற்றிச் சுவைபட எடுத்துக்கூறினர்.

அச்சுவேலி கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி நன்றி கூறினர். ——

## கலைக்கழக நாடகப் போட்டியில் பரிசு

முள்ளியவளை, ஞாயிறு

முள்ளியவளையைச் சேர்ந்த முல்லை. வே. சுப்பிரமணியன் 1964-ம் ஆண்டு இலங்கைக் கலைக்கழகத் தமிழ்நாடகக்குழு நடத்திய தமிழ்நாடகப்போட்டியில் இரண்டாம் பரிசை பெறுகின்றார். இவரின் "பண்டார வன்னியன்" என்னும் வரலாற்று நாடகத்திற்கே மேற்படி பரிசில் வழங்கப்படுகின்றது.

கடந்த பதின்மூன்று ஆண்டு களாக, முள்ளியவளை இயல், இசை, நாடகக்கலாமன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றும் திரு. முல்லை. வே. சுப்பிரமணியன், வன்னிநாட்டு வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். இவர், வன்னிநாடு பற்றிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.



செட்டிகுளம் கொலை வழக்கு

# "என் கணவரும் சகோதரரும் இக்கொலையை செய்யவில்லை"

## சாட்சியை மாஜிஸ்திரேட் எச்சரித்தார்

வவுனியா, ஞாயிறு

'காலஞ்சென்ற பிரான்ஸிஸ் குரேயை எனது கணவரும் சகோதரரும் கொலை செய்தார்கள் என்பதை நான் மறுக்கிறேன்' என்று செட்டிகுளம் கொலைவழக்கில் சாட்சியமளித்த பாக்கியம் எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கத்தினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறினர்.

செட்டிகுளம் கொலைவழக்கு வவுனியா மாஜிஸ்திரேட் திரு. ஓ. எஸ். எம். செனவரத்தின முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1964 ம் ஆண்டு ஜூலை 29-ம் தேதி வவுனியாவைச் சேர்ந்த பிரான்ஸிஸ் குரே என்பவரை கொலை செய்ததாக நல்லதம்பி, அல்லிராசா, பி. திருநாவுக்கரசு. பி. முகமது, நாகமணி பொன்னன் ஆகிய ஐவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

முதல் மூன்று எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானர். வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு இஸடீன் வழக்கை நடத்தினர்.

குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது பாக்கியம் தொடர்ந்து கூறியதாவது:- காலஞ்சென்றவர் எனது சகோதரருடைய மனைவியின் சகோதரர். அவர் எங்கே இருப்பதென்று எனக்குத் தெரியாது. சாப்பிடுவதற்காக அவர் அடிக்கடி எனது வீட்டிற்கு வரும் வழக்கமுண்டு. சில சமயம் எனது கணவன் வீட்டிலில்லாத சமயமும்வந்துஎன்னுடன் கதைப்பார். எனது கணவர் ஒரு விவசாயி. அவர் அதிகமான நேரத்தை வயல்வேலைகளில் செலவழிப்பார்.

வழ: காலஞ்சென்றவருக்கும் உமக்குமிடையே உள்ள உடலுறவை உமது கணவரும் சகோதரரும் அறிந்ததினுலே அவர்கள் இக்கொலையைச் செய்தார்கள் என்று கூறுகிறேன்.

சாட்சி: இல்லை.

4-ம், 5-ம், எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது. சம்பவம் நடைபெற்ற ஒருமாதத்தின் பின்பே நான் பொலிஸாருக்கு அறிவித்தேன். நான் பொய்ச்சாட்சி என்பதை மறுக்கிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் மாஜிஸ்திரேட், சாட்சியை எச்சரிக்கை செய்து கேட்ட கேள்விகளுக்கு நேர்மையாக பதிலளிக்காவிடில், சாட்சியை ரிமாண்டில் வைக்கப் போவதாக தெரிவித்தார்.

குறுக்கு விசாரணை முடிவடைந்த பின், மாஜிஸ்திரேட் சாட்சியை பார்த்து இனிமேலாவது ஒரு கொலைச் சம்பவத்தை பார்த்தவுடனே, கிராம சேவகரிடமோ, காரியாதிகாரியிடமோ, பொலிஸாரிடமோ அறிவிக்கும்படி கூறினர்.

மேல் விசாரணை அடுத்த மாதம் 4-ம் திகதிவரை ஒத்தி போடப்பட்டிருக்கிறது.


ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
4-15 p.m 7-00p.m &9-45p.m
GHOST RIDERS FROM THE WEST

REGAL — JAFFNA
NOW SHOWING
John Derek — Elaine Stewart
IN
TALES OF A CAPTIVE PRINCESS
(Colourscope)

கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) மொடர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமசந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்


## மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

வசாவிளான் மத்திய கல்லூரிக்கும் நடேஸ்வராக் கல்லூரிக்குமிடையே, நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வசாவிளான் மத்திய கல்லூரிக் கோஷ்டியினர் 5—0 கோல்களால் வெற்றி பெற்றனர். என். அப்பையா, எஸ். அல்பிரட் செல்வம், அ. தவராசா ஆகியோர் திறமையாக விளையாடினர். இப்போட்டிக்கு திரு. எஸ். நவபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## சேவியர் இல்லம் வெற்றி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இல்லங்களுக்கான உதைபந்தாட்டத்தில் சேவியர் இல்லம் சம்பியனானது. இரண்டாவது மூன்றாவது பிரிவுச்சாம்பியனாக பொஸ்கோ இல்லம் வெற்றியடைந்தது.

## வீதிகளைத் திருத்த நடவடிக்கை

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் நகரசபையின் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றபோது நகரசபை எல்லைக்குட்பட்ட பல ஒழுங்கைகள், வீதிகள் ஆகியவற்றைச் செப்பனிடுவதுடன் சிலவற்றுக்குத் தார்போட்டு மதவுகளும் கட்டும்வகையில் சுமார் 70 ஆயிரம் ரூபாய் செலவிடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

கயித்தார் சந்தியிலிருந்து யக்குவளை ஒழுங்கைவரையும் மின்சாரவிநியோகத்தை விஸ்திரிக்க 13386 ரூபா செலவிடுவதெனவும், வி. எம் ரோட்டிலிருந்து அந்த உடையார் ஒழுங்கைவரை விஸ்தரிக்க 5800 ரூபா செலவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பொலிசார் ஆயினர்

சென்னை, அக். 25

பர்மாவிலிருந்து வந்த இந்தியர்களில் 50 பேர் பொலிஸ் கான்ஸ்டபிள்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறர்கள்.

## மாவட்டகுழு தெரிவு

அட்டன், ஞாயிறு

இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு. செ. கவியப்பெருமாள் தலைமையின் கீழ் கழகத்தின் நுவரேலியா மாவட்டக்குழு தெரிவு செய்யவதற்காக நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் மாவட்டக்குழு உத்தியோகத்தர்களாகவும், குழு உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ப. செல்வராஜ். துணைத் தலைவர், ந. அ. சின்னத்தம்பி. செயலாளர்: திரு. வே. கிருஷ்ணசாமி. துணைச் செயலாளர்: திரு. சிவனு பொருளாளர்: திரு. மாணிக்கம். குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் மு. ராமசாமி, கிட்டசாமி, மா. மாரிமுத்து, எஸ். கே. கந்தையா, முத்தையா, க. ரா. ராமையா.

## 'கொள்கைகளை புதைக்கிறர்'

அம்பலாங்கொடை, செவ்.

வேலை நிறுத்தம் என்ற ஆயுதம் மூலம் தனது கணவனாகிய பண்டாரநாயக்காவை, டாக்டர் என். எம். பெரேரா கொலை செய்தார் என்று ஒரு சமயம் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்தார். இன்று அதே என். எம். பெரேராதான், காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் கொள்கைகளை ஒவ்வொன்றாக குழி தோண்டி புதைத்து வருகிறர் என்று சிங்கள ஜாதிக சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பன்னசேகர தேரோ கூறினர்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் பருத்தித்துறைநகரசபைத்தலைவர் அவர்களால் கோரப்படுகின்றன.

தம்பசெட்டி கோணந்தீவு வீதி திருத்துதல், றெயினேச்சனுல் வீதி திருத்துதல், ஓடக்கரை, வீதி திருத்துதல், ஐயனுர் கலட்டி ஒழுங்கை திருத்துதல், செட்டித்தெரு ஒழுங்கைகள் (3-ம் 7-ம் வட்டாரம்) திருத்துதல், என். எம். ஒழுங்கை திருத்துதல், சவக்காலை ஒழுங்கை திருத்துதல், தட்டாதெரு வீதி திருத்துதல், நெல்லண்டைவீதி திருத்துதல், வண்ணு ஒழுங்கை திருத்துதல், கந்தசாமிவைத்தியர் ஒழுங்கை திருத்துதல், அரசடி ஒழுங்கை மதவு சுவர் கட்டுதல், சுசுரபாதம் ஒழுங்கை மதவு சுவர் கட்டுதல், கந்தசாமி வைத்தியர் ஒழுங்கை மதவுசுவர் கட்டுதல், சந்தா தோட்ட ஒழுங்கை திருத்துதல், முதலி கோவில் ஒழுங்கை திருத்துதல், யாலப்பை ஒழுங்கை திருத்துதல், சவளுய் ஒழுங்கைதிருத்துதல், மின்சார நிலையக் கட்டிட நிலையம் திருத்துதல்.

(2) கேள்வி விண்ணப்பங்கள் 4-11-64 பிற்பகல் 2 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பப் பிரதிகள் 2-11-64 பிற்பகல் 2 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பெறுபவர் ரூபா 25-00 பிணைப்பணமும் ரூபா 5-00 பிரவேசப்பணமும் செலுத்த வேண்டும்.

(4) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்கவேண்டும். அங்ஙனம்தவறுபவரின் பிணைப் பணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

(5) மேற்படி வேலைகளின் முழுவிபரங்களை அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வே. நாகநாதன்,
தலைவருக்காக,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை.
21-10-64. 960

## ஆசிரியரின் 25 வருட சேவைக்குப் பாராட்டு

வவுனியா, ஞாயிறு

"சிறந்த நடிகரும் கலைஞருமாகிய திரு. இ. த. சுப்பிரமணியம் சைவவித்தியாவிருத்திச்சங்கப் பாடசாலையில் 1938-ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றிவந்தவர். கலவெட்டித் திடலில் நாகேசுவர வித்தியாலயத் தலைமையாசிரியராகவும், காந்தி சேவாசங்கத் தலைவராகவும் இவர் ஆற்றிய தொண்டு மகத்தானது." இவ்வாறு கலவெட்டித்திடல் காந்திசேவாசங்கத்தலைவரால் நாகேசுவர வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. இ. த. சுப்பிரமணியத்தின் 25 வருட சேவைபூர்த்தி விழா மேற்படி பாடசாலையில் கொண்டாடப்பட்ட சமயம் தலைமைவகித்த கிராமசேவகர் திரு. எஸ். சின்னத்தம்பி கூறினர். இளைப்பாறியகிராமசபைத் தலைவர் திரு. செ. கந்தையா, திரு. வே. மயில்வாகனம், திரு. க. தம்பிப்பிள்ளை ஆகியோர் திரு. சுப்பிரமணியத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர். ஈற்றில் திரு. இ. த. சுப்பிரமணிம் நன்றி தெரிவித்துப் பேசினர்.


வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சில நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினுல் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

விற்பனைக்கு

3 ஸ்ரீ 8000 தொடர்பிலக்கமுடைய BSA மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. க இராசரத்தினம், கொக்குவில் மேற்கு, கொக்குவில். 1054

உடுவிலில் காங்கேசன்துறை வீதியோரமாக வீடு கட்ட உகந்த நல்ல காணி. விபரத்துக்கு ஈழநாடு மேற்பார்த்து. 1049

தேவை

அலுமினியப் பாத்திரம் தயாரிக்கக்கூடிய திறமை வாய்ந்தவர் தேவை. எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1041

செயற்கை பிரம்பால் (Plastic Rattan) நாற்காலி வகைகள் பின்னுவதில் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 1042

சிங்களம்

ஆறுமாதத்தில் தபால்மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். இலவச விபரங்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும். ஏ. பி. டானியல், வாடிவீட்டுத்தெரு, மாகோ. 1037

காணவில்லை

இந்திராணி, வயது 13, உயரம் 4 அடி 5 அங்., மெலிந்த தோற்றம், கறுப்புநிறமுடையவர். மொறங்கந்த ரப்பர் தோட்டத்திலிருந்து ஸ்டேசன் ரோட்டிலுள்ள கெவித்தான (Servant agency Kandavil) என்பவரால் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு 180/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் வசிக்கும் நடராசா (Insurance Corperation of Ceylon Jaffna) என்பவரின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டது. சென்ற ஒரு வருடகாலமாகக் காணவில்லை. தகவல் கொடுப்போருக்கு ரூபா 100/- வெகுமதி அளிக்கப்படும். L. S. Hinny mahatmaya, weliheeriya Pihimbuwa என்ற விலாசத்திற்கு அல்லது நெருங்கிய பொலிஸ் ஸ்டேசனில் அறிவித்தல் கொடுக்கவும். 1050

தீபாவலிக்கலை!

புண்ணியமும் புனிதமும் உண்டாக-உண்மையிலும் நன்மையிலும் ஆர்வம் வைத்து, விஞ்ஞடாம்பிகத்திலும்விஞன நூதனங்களிலும்-வினை ஆபாசங்களிலுஞ்சிக்காது, ஐம்புலன்களையும் நல்லதில் ஒரு நோக்கி, உலகில் எந்த இடத்திலும் கொடிய நரகாசுரன் தோன்ருது தடை செய்க!

எங்கள் தெய்வங்களுக்கும்-முன்னோர்களுக்கும் பின்னோர்களுக்கும், பெரியோர்களுக்கும் மாறின்றி ஆற்றுங்கலை, இக்கைமாறேயாகும்!!

உடுக்குங் கோடியுடையைப் புண்ணியக்கலைக் கருத்தாக அணிக!!!

வித்துவக்கலைஞன் ஆசி. சாந்தகுரு, சன்மார்க்க தவகூடம், கந்தரோடை. 1055

## விளையாட்டு வீரருக்கு அஞ்சலி

உடுப்பிட்டி, ஞாயிறு

"விளையாட்டிற்கென்றே பிறந்து விளையாட்டினாலேயே உயிர்நீத்த, கடமை வீரர் திரு. ஜெகசோதியை நினைவு கூர வேண்டியது நம்தலையாய கடனாகும், தாம் பதவியிலிருந்த காலத்தில் வடமராட்சிப் பகுதியில் முதன்முதலாக மாணவர் கடேற்படையை இக்கல்லூரியில் ஸ்தாபித்த பெருமை அவருக்கே உரியது. மாணவர்களை வருங்கால வீரர்களாக ஆக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் துப்பாக்கி சுடுதல், ஈட்டி எறிதல் முதலிய பயங்கர விளையாட்டுக்களையும் விளையாட்டாகவே பழக்கி வைத்தவர் திரு. ஜெகசோதி. நாட்டிற்குத் தேவையான வர்களைக் காலம் விட்டு வைப்பதில்லை. விளையாட்டில் எமது கல்லூரிக்கு அவர் தேடிக்கொடுத்த பெருமையை அழியாமல் காக்க வேண்டியது மாணவர்களின் கடனாகும்"

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய உடற்பயிற்சி ஆசிரியரும் முன்னாள் இலங்கை இராணுவ லெப்டினன்டுமான திரு. டி. ஆர். ஜெகசோதி விளையாட்டுப் போட்டியொன்றில் ஈட்டி எறிபட்டு மரணமடைந்ததை யொட்டி அவரை நினைவு கூரு முகமாக நெல்லியடி அ. ம. ம வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை வகித்த அதிபர் திரு. சு. இரத்தினசபாபதி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஜெகசோதியின் உருவப்படத்தைத் திரை நீக்கஞ் செய்து வைத்த ஆசிரியர் திரு மு. ஏரம்பு பேசுகையில், "சிறந்த வீரர்களை உருவாக்கும் பணியில் அவரின் இலட்சியம் நிறைவேறுமலேயே உயிர் நீத்து விட்டார். எனவே மாணவர்கள் தாம் விளையாடும் ஒவ்வொரு விளையாட்டிலும், கலந்து கொள்ளும் ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றிவாகை சூடி திரு. ஜெசோதியின் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்க வேண்டும்" என்று கூறினர்.

இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவர் கடேற் குழுவினர் விசேஷ அணிவகுப்பு மரியாதைகள் செலுத்தினர்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்
### திங்கள் 26-10-64
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைகானம்.

இரவு 6-15 கிராமசஞ்சஞ்சிகை, 6-45 வீணை — ஞானம் செல்லையா, 7-15 பாட்டு — என். கந்தசாமி, 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 தேர்ந்தஇசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 வாத்தியஇசை, 1-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பாட்டு — திருநகரி டி. ஆர். சேஷாத்ரி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 கதம்பம், 2-10 உயர்தர பள்ளிகளுக்கு, 2-40 பொன்னொளிர் பாரதம்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சி 8-00 சங்கத்தமிழ் இசைச் சித்திரம், 9-15 வீரபாரதம், 9-30 இசைக்கோவை — ஜி என். பாலசுப்பிரமணியம்.

---

# மொறட்டுவ கொலை வழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை

கொழும்பு, ஞாயிறு

மொறட்டுவ கொலை வழக்கு கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. எல் சுவாரிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின், நீதிபதி மூன்று எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் குற்றவாளிகளாக இருந்தபோதிலும், சட்டரீதியான ஆதாரங்கள் இல்லாததால், இவ்வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்தவில்லையென நீதிபதி தீர்ப்பளிக்கும்போது தெரிவித்தார்.

இவ்வழக்கில் மொறட்டுவவைச்சேர்ந்த குளோட் பெர்ணன்டோவைக் கொலை செய்ததாக, பி. சேனரத், ஐ. ஏ. பெர்ணன்டோ, ஹென்றி பெர்ணன்டோ, திருமதி டெய்ஸி பெர்ணன்டோ ஆகியோர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இதற்கு முந்திய தவணையின் போது திருமதி டெய்ஸி பெர்ணன்டோ விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பேஸில் வைட், இவ்வழக்குச் சம்பந்தமாக மேலும் சாட்சியங்களில்லையென்றும், ஒரே ஒருகண்கண்ட சாட்சியும், பொலிஸ் வாக்குமூலத்திலிருந்து வேறுபாடாக சாட்சியமளித்திருப்பதாகவும் கூறினர். இங்கு சாட்சியமளித்த சுபசிங்காவின் சாட்சியத்தை 1-ம், 2-ம் எதிரிகளுக்கு எதிராக பாவிக்கமுடியாதென்றும் 3-ம் எதிரிக்கு எதிராகக்கூட அவரின் சாட்சியத்தைப்பாவிக்கமுடியாதென்றும் முடிக்குரிய வழக்கறிஞர் மேலும் தெரிவித்தார்.

கண்கண்ட காட்சியாகக் கருதப்படும் பேர்டிகுலரத்தின, மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சாட்சியமளித்த போது, தான் பொலிசாருக்கு வாக்குமூலம் அளிக்கவில்லை என்று தெரிவித்தார். கொலையுண்ட குளோட் பெர்ணன்டோவைத் தனக்குத் தெரியாதென்றும், இக்கொலைச் சம்பவம் எதுவும் தனக்குத் தெரியாதென்றும், சாட்சியமளித்த குலரத்தின தெரிவித்தார்.

1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ஊ. பி. சத்துருகுலசிங்கம், திரு. விஜே. வீரவர்த்தனவின் அனுசரணையுடன் ஆஜரானர். 2-ம், 3-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. சுசபந்து திரு. நகில் சமரக்கொடியின் அனுசரணையுடன் ஆஜரானர். கல்கிசை ஏ. எஸ். பி. மகேந்திரனின் உதவியுடன், திரு. பேசில் வைட் முடிக்குரிய தரப்பில் ஆஜரானர்.

---

## அண்ணனைத் தம்பி கொலைசெய்தாராம்

அநுராதபுரம், ஞாயிறு

சந்திரசேகரா என்பவர் கத்தி ஒன்றை இடுப்பிலிருந்துஎடுத்து நிலத்தில் விழுந்துகிடந்த ஜெயசேகரா என்பவரைக் குத்தி விட்டு ஹோட்டலில் இழுத்துச் சென்றதை தான் கண்டதாகவும் ஹோட்டலில் வேலை பார்க்கும் நவரத்தினம் என்பவர் அநுராதபுர நீதவான் திரு. பி. மறப்பானே, கொலை செய்யப்பட்ட இடத்தில் நடத்திய விசாரணையின் போது தெரிவித்தார்.

கொலை செய்த சில மணித்தியாலயத்திற்குள் கொலைசெய்யப்பட்டவரின் இளைய சகோதரரான சந்திரசேகர பொலிசாரிடம் சரணகதியடைந்தார். அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஜெயசேகரா காலமானர். நீதிவான் வழக்கை அக்டோபர் மாதம் 23-ந் திகதி ஒத்திவைத்தார்.

---

## கொடிகாமத்துக்கு இருதட்டு பஸ்

கச்சாய், ஞாயிறு

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த நான்கு இரட்டைத் தட்டு பஸ்களில் ஒன்று அடுத்த மாதம் 1-ம் திகதி முதல், யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்குமிடையில் சேவைக்கு விடப்படுமென்று தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம்—கொடிகாமம் வீதியில் உள்ள மரக்கொப்புகள் வெட்டப்பட்டு விட்டதாகவும், சாவகச்சேரியில் சில மின்சார கம்பிகள் பதிவாக இருப்பதால், அவ்வழியால் இரட்டைத்தட்டுபஸ்போக முடியாமல் இருப்பதாகவும், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு இவ் விஷயமாக, பொது வேலைப் பகுதியினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் விரைவில் இக்கம்பிகள் இரட்டைத் தட்டு பஸ்களில் முட்டாதபடி உயரத்தில் இணைக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

---

## காற்று வாங்கியவர் காலன்வசமானர்

மாவிட்டபுரம், ஞாயிறு

கிணற்றுக் கட்டில் இருந்து காற்றுவாங்கிய ஒருவர், கிணற்றில் தவறி விழுந்து மரணமான சம்பவமொன்று சங்கரத்தையில் நடைபெற்றுள்ளது.

சங்கரத்தையைச் சேர்ந்த நன்னித்தம்பி சின்னத்தம்பி என்பவர் கிணற்றுள் விழுந்து மரணமானது சம்பந்தமாகத் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். ரி நடராசா மரணவிசாரணை நடத்தினர்.

மரணவிசாரணையில் காலஞ்சென்றவர் வைத்தியர் வீட்டிற்குச் சென்றுவிட்டு வயல்வெளியால் திரும்பிவரும்போது, வயலில் உள்ள கிணற்றுக் கட்டிலிருந்து காற்று வாங்கியதாகவும், அப்போது தற்செயலாகக் கிணற்றில் தவறிவிழுந்ததாகவும் கூறப்பட்டது. மரண விசாரணை அதிகாரி விபத்தால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

## தொண்டமான்...
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. தொண்டமானையும், திரு. அஸீஸையும் சேர்த்துக்கொள்ளும் முயற்சி சில மாதங்களுக்கு முன் இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங், இந்திய காமன்வெல்த் காரியதரிசி திரு. சி. எல். ஜெயா ஆகியோர் இங்கு வந்தபோது முலன்முதலாக எடுக்கப்பட்டதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இலங்கை - இந்தியர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள புதுடில்லி புறப்பட்ட ஐந்து பேர் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோஷ்டியொன்றை அவர்களின் பிரயாண பத்திரங்களை வழங்க மறுத்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் தடை செய்தது.

இலங்கையில் உள்ள நாடற்றவர்களில் அதிகமானேர்களை இந்தியா ஏற்கவேண்டுமென இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள கருத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்படும் தொகையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அதற்கு பதிலாக இலங்கை அரசாங்கம் மிகுதிப் பேர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க சம்மதிக்கும்.

---

## உதவி ஸ்டேஷன் மாஸ்டர் தற்காலிக வேலை நீக்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு

அண்மையில் காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்த ரயில்வண்டி ஒன்று பிரதான பாதையில் செல்லாது சாமான் வண்டி ஒன்று நின்ற பாதையில் சென்றது சம்பந்தமாக புகையிரதப் பகுதியினர் விசாரணை நடத்திவருகிறர்கள் சாரதிகளின் சமயோசிதத்தினல் விபத்துத் தடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது,

இது சம்பந்தமாக புகையிரதப்பகுதியினர் காங்கேசன்துறை ரயில்வே நிலையத்தைச் சேர்ந்த ஒரு உதவி ஸ்டேஷன் மாஸ்டரையும், ஒரு போயின்ஸ் மன்னையும் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்துள்ளனர்.

---

## ஜோன்ஸனுக்கு லூதர் ஆதரவு

ஒகியோ, அக். 25

இந்த ஆண்டு சமாதான நோபல் பரிசுபெற்ற நீக்ரோ தலைவர் திரு. மார்ட்டின் லூதர் கிங், ஜனதிபதி தேர்தலில் திரு. ஜோன்ஸனை ஆதரிக்குமாறு அமெரிக்க நீக்ரோக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறர். அமெரிக்க சரித்திரத்தில் திரு. கோல்ட்வாட்டரைப் போல் அபாயமான பேர்வழி இருந்ததில்லை என்றும் அவர் கூறினர்.

---

## ரூ. 59 கோடி பாதுகாப்பு நிதி

புதுடில்லி, அக். 25

சென்ற மாதம் இறுதிவரை தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 59 கோடியே 8 லட்சம் ரூபாய் சேர்ந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது இதில் பிரிட்டனிலிருந்து கிடைத்த 28 லட்சம் ரூபாயும், இதரநாடுகளில் இருந்து கிடைத்த 28 லட்சம் ரூபாயும், இதர நாடுகளிலிருந்து கிடைத்த 63 லட்சம் ரூபாயும் அடங்கும்.

2, 15, 000 தோலா தங்கமும் தங்க நகைகளும் கிடைத்திருக்கின்றன.

---

## மீனவர் மீது இராணுவ தாக்குதல்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைப் பெரிய கல்லடியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை என்பவரையும் அவருடன் இன்னும் சில நபர்களையும் வல்வெட்டித்துறை இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் அவர்கள் வலை பின்னிக் கொண்டிருந்தபோது குறித்த நபர்களைக் கள்ளக்கடத்தற்காரரென சந்தேகித்து அவர்களைத் தாக்கியுள்ளதாக அறியப்படுகிறது. இரவு 7-30 மணியளவில் வேறொரு இராணுவ கோஷ்டி கடையில் சாமான் வாங்கிக்கொண்டு வந்த செல்லத்துரை என்பவரை வழிமறித்து சந்தியில் வைத்துத் தாக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

வடலியடைப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சென்ற கூட்ட அறிக்கை, கணக்கு அறிக்கை சபையோரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் புது வருட உத்தியோகஸ்தர்தெரிவு நடைபெற்றது. தலைவர்: திரு. அ வீரசிங்கம், உப தலைவர்: திரு, அ. க. துரையப்பா, காரியதரிசி: திரு. க. சி இரத்னம்.

---

## சுற்றவாளியாக தீர்ப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

வல்வெட்டித்துறையிலிருந்து கள்ளத்தனமாக சாராயம் கடத்தி வருவதற்கு உதவி செய்ததாக நெல்லியடியைச் சேர்ந்த மு. சிவயோகநாதன் என்பவருக்குச் சொந்தமான காரின் மீது வல்வெட்டித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி ரூபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கார் சொந்தக்காரரை சுற்றவாளியெனக் கண்டு அவரின் காருக்குக் கட்டப்பட்டிருந்த 10,000 ரூபா பிணையும் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

---

## வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை

மாவிட்டபுரம், ஞாயிறு

45 வயதுள்ள ஒருவர் தனது மூன்றாவது தற்கொலை முயற்சியில் வெற்றியடைந்த சம்பவம் ஒன்று கட்டுவனில் நடைபெற்றுள்ளது.

கட்டுவனைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. எஸ். தாமோதரம் ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினர். மரணவிசாரணையின் போது காலஞ்சென்றவர் சென்ற சில வருடங்களாக பாரிசவாதத்தினல் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் இதனல் தான் வேலை ஒன்றுமில்லாமல் பிள்ளைகளுக்குப் பாரமாக கருதி வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்ததாகவும், இதற்கு முன்னர் இரு தடவை நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்ய முயன்றதாகவும், முயற்சியில் தோல்வியுற்றவர் நேற்று மூன்றாவது தடவையாக மகளை தேநீர் வைத்துத் தரும்படி கேட்டுவிட்டு மகள் குசினிக்கு போக அவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானதாகவும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி காலஞ்சென்றவர் பலதடவை தற்கொலைசெய்ய முயன்றவரென்று தெரிந்தும் அவர்மேல் உறவினர்கள் கவனமாக இருக்கவில்லையெனகண்டித்து, நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்ததாகத் தீர்ப்பளித்தார்.

---

## 700 புதிய பஸ்களை வரவழைக்க ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை போக்குவரத்துச் சபையினர் 700 'மேசிடஸ் பென்ஸ்' பஸ்களை லண்டனிலிருந்து வரவழைப்பதற்காக ஒழுங்கு செய்துள்ளார்கள். இந்த பஸ்களை வாங்குவதற்கு ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா அரசாங்கத்திற்குச் செலவாகும்.

---

## மரண அறிவித்தல்
### மேரி சின்னம்மா ஜோன்

ஜோன் தேவசகாயம் (முல்லைத்தீவுR. D. O.),ருத், கமலம், மங்களம், செல்வமணி, அனு, மலாயாவிலுள்ள ஜேம்ஸ் ஆகியோரின் அருமைத் தாயாரும் ராஜசேகரம், செல்லத்துரை, கிருஷ்ணபிள்ளை, றெஜினு ஆகியோரின் அருமைமாமியாருமாகிய மேரி. சின்னம்மா ஜோன் காலமாகிவிட்டார். இன்று மாலை 4 மணிக்கு பெரிய கோவில் சவக்காலையில் நல்லடக்கத்துக்காக அன்னாரது பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தகவல் கொடுப்பவர்: இ. கமலராஜன், கோப்பாய் 1056

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: